Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.231/2020

**Depositions of PW- 7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பாண்டியராஜ் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | லட்சுமணன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of March 2026.

06.03.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு விருதுநகரில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மம்சாபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 29.12.2019 அன்று காலை 06.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பிலிருந்தபோது மம்சாபுரம் தன்னாசி தெருவை சேர்ந்த ஜெகந்நாதன் மகன் காமராஜ் வயது 53 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.187/2019 பிரிவுகள். 454, 380 இதசவ ஆக வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவையும் இணைத்து கனம் நீதிமன்றம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்து ஒரு அசலை சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்து தகவல் சொன்னேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் கடையானது காவல்நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் சம்பவம் 26.12.2019 அன்று நடந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் 29.12.2019 அன்று காலை 06.30 மணியளவில் எங்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் புகார் மனுவானது 3 நாட்கள் கால தாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவில் புகார்தாரரின் கையெழுத்துக்கு கீழ் தேதியானது 29.02.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மனுதாரர் புகார் மனுவை கொடுக்கும்பொழுதே அவ்வாறு தான் எழுதப்பட்டிருந்தது. மேற்படி புகார் மனு யாரால் எழுதப்பட்டது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் மனுவில் பணத்தின் Denomination குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றாலும் புகார்மனுவானது காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பொய்யான புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.